Investing in People
Strengthening our Economy

Investir dans les gens
Consolider notre économie

2005 ONTARIO BUDGET

BUDGET DE L'ONTARIO 2005

Ontario

News Release
Communiqué

உடனடிச் செய்தி வெளியீட்டுக்காக
மே 11, 2005

# 2005 வரவு செலவுத் திட்டம்
# மக்களில் முதலீடு செய்கிறது - ஒன்ராறியோவின் பொருளாதாரத்தை வலுவாக்குகின்றது

## கல்லூரி மற்றும் பல்கலைக் கழகக் கல்வியில் 6.2 பில்லியன் டொலர் முதலீடு - 2004-05 பற்றாக்குறை 3 பில்லியன் டொலராகக் குறைப்பு

**குயீன்ஸ் பார்க்** - மக்கின்ரி அரசாங்கம் தனது இரண்டாவது வரவு செலவுத் திட்டத்தை இன்று வெளியிட்டுள்ளது. பற்றாக்குறையை அகற்றுவதில் கணிசமான முன்னேற்றத்தை எய்திவரும் வேளையில், ஒன்ராறியோவின் முன்னுரிமைக்குரிய கல்வி, சுகாதாரம், ஒரு வலுவான பொருளாதாரம் ஆகிய துறைகளில் இது முக்கிய முதலீடுகளை மேற்கொள்கின்றது.

"கடந்த 40 வருடங்களில், கல்லூரி மற்றும் பல்கலைக் கழகக் கல்வியிலும் பயிற்சியிலும் மிகப் பெரிய, பல்லாண்டு முதலீட்டினை இந்த வரவு செலவுத் திட்டம் உள்ளடக்குகின்றது என்பதை நான் பெருமையுடன் அறிவிக்க விரும்புகின்றேன். இது புதிய வேலை வாய்ப்புக்களையும் பொருளாதார வளர்ச்சியையும் ஏற்படுத்தக்கூடிய, மேலும் சிறந்த பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள் மற்றும் பயிற்சிகளில் மேற்கொள்ளப்படும் ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த முதலீடாகும்." இவ்வாறு ஒன்ராறியோவின் நிதியமைச்சர் கிறேக் சொபெறா தெரிவித்துள்ளார். "மேலான கல்விக்கான சிறந்த பாடசாலைகளையும், ஆரோக்கியம் மிக்க ஒன்ராறியோ மக்களுக்கு, மேலும் சிறந்த சுகாதார பராமரிப்பையும், ஒரு வலுவான பொருளாதாரத்துக்குத் தேவையான உட்கட்டமைப்பில், புத்திசாதுரியமான முதலீட்டையும் மற்றும் வலுவான பொருளாதார முகாமைத்துவத்தையும் வழங்குவதே எமது நோக்கமாகும்."

புதிய வரிகளற்ற இந்த வரவு செலவுத் திட்டமானது, 2008-09 அளவிலாவது பற்றாக்குறையைச் சமநிலைப்படுத்த உத்தேசிக்கின்றது. கையிருப்பு தேவைப்படாத பட்சத்தில், ஒரு வருடத்துக்கு முன்னரே பற்றாக்குறை நீக்கப்படும். அரசாங்கத்துக்குக் கிடைக்கப்பெற்ற பற்றாக்குறையின் ஏறக்குறைய பாதி அளவான 3 பில்லியன் டொலருக்கு 2004-05 பற்றாக்குறை குறைக்கப்பட்டுள்ளது.

*உயர் நிலையை அடைதலின் கீழ்: கல்லூரி மற்றும் பல்கலைக் கழகக் கல்விக்கான மக்கின்ரி அரசின் திட்டம்,* இன்று முதல் 2009-10 வரை கல்லூரி மற்றும் பல்கலைக் கழகக் கல்விக்கென மேலும் 6.2 பில்லியன் டொலர் செலவிடப்படும். 2004-05இல் திட்டமிடப்பட்டதை விட, 2009-10 அளவில் கல்லூரி மற்றும் பல்கலைக் கழகக் கல்விக்கான செலவினங்கள் 1.6 பில்லியன் டொலர் அதிகமாக இருக்கும். *உயர் நிலையை அடைதலின்* முக்கிய அம்சங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கும்:

- குறைந்த மற்றும் நடுத்தர வருமானமுள்ள 135,000 மாணவர்களுக்கு இவ்வருடம் அதிகரித்த பொருளாதார உதவி;
- கல்லூரி, பல்கலைக் கழகக் கல்வியில் பதிவு செய்துகொள்ளும் கல்லூரி மற்றும் பல்கலைக் கழக மாணவர்களின் எண்ணிக்கையைக் கணிசமான அளவு அதிகரித்தல்;
- முதல்வருட மருத்துவக் கல்வி இடவசதிகளை 15 சதவீதத்தினால் விரிவுபடுத்தல்; மற்றும்
- 2007-08 அளவில் புதிய தொழிற் பயிற்சியாளர்களின் வருடாந்த எண்ணிக்கையை 26,000க்கு அதிகரித்தல்.

"ஒன்ராறியோவுக்கு போட்டிக்குரிய பாலாபலனையும் வளர்ச்சியையும் தரவல்ல - ஓர் அத்தியாவசியமான கேந்திர முதலீட்டினை எமது மக்களில் நாம் மேற்கொள்கின்றோம்" என்று சொபெறா கூறினார். "இந்த மாபெரும் முதலீட்டுக்குப் பிரதிபலனாக, மேலதிகமாகப் பெறும் வழிவகைகளையும் தாராதரத்தையும் நம்பகத் தன்மையையும் நாம் வற்புறுத்துவோம்."

காத்திருப்பு நேரங்களைக் குறைப்பதற்கும் மக்களை ஆரோக்கியமாக வைத்திருப்பதற்கும் என்று மக்கின்ரி அரசாங்கம் மேலும் அதிக வைத்தியர்களையும் தாதியர்களையும் வழங்குகின்றது. இப்பணமானது:

- 2.5 மில்லியன் ஒன்ராறியோ மக்களுக்கு 24/7 என்ற அடிப்படையில் விசாலமான பிரதான சுகாதார பராமரிப்பை வழங்குவதற்கென 2007-08 அளவில் குடும்ப சுகாதாரக் குழுக்களின் எண்ணிக்கையை 150 ஆக அதிகரிக்கின்றது;
- இவ்வருடம் மேலும் சுமார் 2,900 புற்றுநோய் சத்திர சிகிச்சைகள், 14,000 அல்லது 13 சதவீதம் அதிக கண் சவ்வு நோய் சத்திர சிகிச்சைகள், சுமார் 7,000 அல்லது எட்டு சதவீதம் அதிக இருதய சிகிச்சை நடவடிக்கைகள், 4,300 அல்லது 16 சதவீதம் அதிக இடுப்பு, முழங்கால் மூட்டு மாற்றுக்கள், 53,200 அல்லது 19 சதவீதம் அதிக MRI பரிசோதனைகள் ஆகியவற்றை வழங்குகின்றது; மற்றும்
- 2007-08 அளவில் 232,000க்கும் அதிகமான முதியோர், பலவீனமான வயது முதிர்ந்தோர் மற்றும் உடற் குறைபாடுடைய மக்கள் ஆகியோர் சமூக உதவிச் சேவைகளைப் பெறும் வாய்ப்பினை முன்னேற்றுகின்றது.

“மக்கள் ஆரோக்கியமாக இருக்க உதவுவதற்கு மேலும் பலவற்றைச் செய்வதும், அவர்கள் நோய் வாய்ப்பட்டால் அவர்களுக்கு மேலும் சிறந்த பராமரிப்பை வழங்குவதும், எதிர்காலப் பரம்பரையினருக்கு மருத்தவ பராமரிப்பு நிலைபெற்றிருப்பதற்குத் தேவையானவற்றைச் செய்வதும் அரசாங்கத்தின் திட்டமாகும்” என்று சொபெறா கூறினார்.

பின்வரும் வழிகளூடாக பாடசாலை முன்னரான கல்வியிலிருந்து உயர்தரக் கல்விப் பட்டமளிப்பு வரை சிறுவர்களது கல்வியில் அரசாங்கம் தொடர்ந்து முதலீடு செய்யும்:

- Best Start எனப்படும் மிகச் சிறந்த ஆரம்ப திட்டம், உரிமம் பெற்ற குழந்தை பேணல் இடவசதிகளைக் கணிசமான அளவு அதிகரிக்கச் செய்து, குழந்தை பேணல் கட்டண மானியத்தை அதிக குடும்பங்களுக்குக் கிடைக்க வழிசெய்யும்;
- 1300 பாடசாலைகளில் வகுப்பு மாணவர்களது எண்ணிக்கை ஏற்கனவே குறைக்கப்பட்டுள்ளது. அத்துடன் கனிஷ்ட பாலர் வகுப்பிலிருந்து 3ஆம் தரம் வரை வகுப்பு மாணவரது எண்ணிக்கையை ஒரு வகுப்புக்கு 20 எனக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன;
- மாணவர் திறமையை முன்னேற்ற மேலும் 8,000 ஆசிரியர்களைப் பயற்றுவித்தல் மற்றும் வாசிப்பிலும் கணிதத்திலும் அதிக மாணவர்கள் மாகாண தராதரத்தை எய்துவதற்கு உதவுதல்; மற்றும்
- **கற்பதற்கென நல்ல இடங்கள்** எனப்படும் திட்டத்தின் நிதியானது பாடசாலைகளில் நிர்மாணம், வசதி வாய்ப்புத் திருத்தம், புதுப்பித்தல் வேலைத் திட்டங்கள் என்பவற்றிற்கென, பாடசாலைச் சபைகள் 4 பில்லியன் டொலரை மூன்று வருடங்களுக்குப் பொறுப்பேற்பதற்கு அனுமதிக்கும்.

“சிறிய வகுப்புக்களுக்கும் உயரிய மாணவ தராதரத்துக்குமான எமது வாக்குறுதிகளை நாம் வழங்குகின்றோம்” என சொபெறா மேலும் கூறினார். “ஒன்ராறியோவிலுள்ள பெற்றோர் எதிர்பார்க்கின்றார்கள், அவர்களது பிள்ளைகள் சற்றேனும் குறையாத வகையில், அதற்குத் தகுதியுடையவர்கள்”

பின்வருவன உட்பட, உட்கட்டமைப்பிலும் பதியன கண்டுபிடிப்பதிலும் தீவிரமாக முதலீடு செய்வதனூடாக ஒன்ராறியோவின் பொருளாதாரத்தை வலுவாக்கும் திட்டங்களை இந்த ஆவணம் வரையறுக்கின்றது:

- பாதைகள், போக்குவரத்து, வைத்தியசாலைகள், பாடசாலைகள், கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் என்பவற்றுக்கான ஒரு ஐந்து வருட 30 பில்லியன் டொலர் உட்கட்டமைப்புத் திட்டம்;
- கட்டுப்படியாகக்கூடிய வீடமைப்பின் 15,000 அலகுகள்; மற்றும்
- புதியன கண்டுபிடித்தலில் ஒன்ராறியோ மாகாணத்தை முன்னணி வகிக்க வைப்பதற்கென ஓர் ஒன்ராறியோவின் ஆராய்ச்சி சபை (Research Council of Ontario) முன்மொழியப்பட்டுள்ளது.

“எமது நிதி விவகார முகாமைத்துவத்தில் நாம் அறிமுகப்படுத்தியுள்ள கட்டுப்பாடுகள் காரணமாக எமது திட்டம் பயனளிக்கின்றது” எனக் கூறிய சொபெறா, முன்னுரிமைக்குரிய துறைகளில் முதலீடு செய்வதற்காக, அநேகமான அமைச்சுக்களின் செலவினங்களை அரசாங்கம் கட்டுப்படுத்தி வருவதாக மேலும் தெரிவித்தார்.

“ஒன்ராறியோவின் எதிர்காலத்துக்கு உகந்த ஒன்றென நாம் கருதும் இந்த வரவு செலவுத் திட்டமானது சமநிலைப்படுத்தப்பட்ட பொறுப்பு வாய்ந்த ஓர் அணுகுமுறையாகும்” என்று சொபெறா தெரிவித்தார். “இது எமது பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கும் எதிர்காலத்தில் வசிப்பதற்கு உகந்த இடம் ஒன்ராறியோ என்பதை உறுதி செய்வதற்கும் என்று மக்களில் - அவர்களது சுகாதாரம், கல்வி செல்வச் செழிப்பு என்பவற்றில் முதலீடு செய்வதற்கான ஒரு திட்டமாகும்”.

-30-

தொடர்புகளுக்கு:
Sean Hamilton
Minister’s Office
416-325-8679

Manuel Alas-Sevillano
Ministry of Finance
416-212-2155

Tamil